புலியூர்குறிச்சி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை: திருமதி.ப.ராஜகுமாரி

அனுமதி எண்: 2/2024 - 2025 **நாள் : 18.09.2024**

பொருள்: மனைப்பிரிவு அனுமதி – களக்காடு ஊராட்சி ஒன்றியம் – புலியூர்குறிச்சி ஊராட்சி, புலியூர்குறிச்சி கிராமம் – சர்வே எண்: 416/1A2C2, 1B2, 4C-இல் அமைந்துள்ள மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது – உள்ளாட்சிதுறை மூலம் அனுமதி வழங்குதல் – சார்பு

பார்வை : 1. அரசாணை நிலை எண்:79 மற்றும் 172 வீடு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்:04.05.2017

2. இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்: OY4JT4J5/2024/TCP நாள் : 02/08/2024

3. ஊராட்சி மன்ற நடவடிக்கை தீர்மான எண்:66 நாள் : 18.09.2024

ஆணை:

பார்வை 2-ல் குறிப்பிட்டவாறு களக்காடு ஊராட்சி ஒன்றியம், புலியூர்குறிச்சி ஊராட்சி, புலியூர்குறிச்சி வருவாய் கிராமத்தில் சர்வே எண் : 416/1A2C2,1B2,4C-ல் 3.004 ஏக்கர் 12150.00 ச.மீ) பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நிபந்தனையுடன் கூடிய அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்படி உள்ளாட்சித்துறை மூலம் அனுமதி வழங்க பின்வருமாறு கட்டணங்கள் செலுத்தப்படுள்ளது.

1.	வருவாய் கிராமம்	புலியூர்குறிச்சி
2.	சர்வே எண்கள்	416/1A2C2,1B2,4C
3.	அனுமதிக்கப்பட்ட மொத்த மனைகள்	68
4.	மொத்த மனைப்பிரிவு	8676.97 ச.மீ
5.	1. சாலை 3473.03 ச.மீ 2. மின்வாரியம் 65.00 ச.மீ 3. உள்ளாட்சி துறை 58.00 ச.மீ 4. பூங்கா (10%) 910.20 ச.மீ	பூங்கா 910.20 ச.மீ
6.	கூராய்வு கட்டண தொகை / செலுத்திய நாள்	ரூ. 34,000 / 18.09.2024
7.	3% கட்டண தொகை / செலுத்திய நாள்	ரூ 19,800 / 18.09.2024
8.	ஆய்வு கட்டணம்	ரூ.1500/-

மேற்படி மனைப்பிரிவு அமைந்துள்ள இடத்திற்கு, சார்பதிவாளர் கடிதத்தில் சர்வே நம்பர் 416/ 4C: 1 ஹெக்டேருக்கு ரூ 543500 (ச.மீ. 54.35), சர்வே நம்பர் 416/1A2C2, 1B21 ஹெக்டேருக்கு 494500 (1 ச.மீ. 49.45) என சந்தை மதிப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 1-ல் குறிப்பிட்ட அரசாணை மற்றும் பார்வை 2-ல் குறிப்பிட்ட நிபந்தனையுடன் கூடிய அனுமதி அடிப்படையில் புலியூர்குறிச்சி ஊராட்சி, புலியூர்குறிச்சி வருவாய் கிராமத்தில் சர்வே எண்: 416/1A2C2, 1B21-ல்8676.97ச.மீ-ல் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு பின்வரும் நிபந்தனைகளின் படி உள்ளாட்சி முறை அனுமதி வழங்கபடுகிறது.

நிபந்தனைகள்:

1. திருநெல்வேலி நகர் ஊரமைப்பு துறை இணை இயக்குநர் அனுமதி வழங்கியுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் எந்த ஒரு மாற்றமும் செய்யக்கூடாது.
2. பொதுப் பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் எவ்வித ஆக்கிரமிப்பும் மேற்கொள்ளக்கூடாது.
3. பார்வை 1-ல் குறிப்பிட்ட அரசாணையில் தெரிவித்த நெறிமுறைகள் மற்றும் பார்வை 2-ல் குறிப்பிட்ட நிபந்தனையுடன் கூடிய அனுமதிக்கு மாறாக ஏதேனும் தெரியவந்தால், இந்த அனுமதி உடனடியாக ரத்து செய்யப்படும்.
4. வழங்கப்பட்ட அசல் ஆவணங்களில் வில்லங்கம் ஏதும் பின்னர் தெரியவந்தால் இந்த அனுமதி ரத்து செய்யப்படும்.
5. சாலை மற்றும் பொது உபயோகத்திற்கு அனுமதிக்கப்பட்ட இடத்தில் அவ்வலுவலகம் மூலம் ஏதும் மாற்றம் செய்யக்கோரும் பட்சத்தில் அதனை சரி செய்து தர வேண்டும்.
6. மேற்படி செலுத்திய தொகை போக வேறு ஏதாவது கட்டணங்கள் ஊராட்சிக்கு செலுத்த வேண்டும் என தெரிய வந்தால் தாங்கள் முன்வந்து கட்டிவிட வேண்டும்.

தலைவர்
புலியூர்குறிச்சி ஊராட்சி
களக்காடு ஊராட்சி ஒன்றியம்

தலைவர்
புலியூர்குறிச்சி ஊராட்சி
களக்காடு ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்:

திரு. எ. அன்பரசன்
எண் 22எ, கோசல்ராம் நகர்
புலியூர்குறிச்சி
நாங்குநேரி
திருநெல்வேலி - 627108

நகல்:

1. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், திருநெல்வேலி